Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஆ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எஉ] யாழ்ப்பாணம்:- சார்வரிஞூ புரட்டாதிமீ உஉ வெள்ளிக்கிழமை (7 October 1960) [இல-உஎ]

அரசியல் அலை

# எங்கும் இந்த இறுமாப்புநோய் இருக்கின்றதே!

—:0:—

## இலங்கையில் மட்டுமல்ல; ஐக்கியநாடுகள் மன்றத்திலும்

### கோபாவேசக் குறிப்புக்களும் குழப்படி நாடகமும்!!

இது பொல்லாத நோய்; இங்குமட்டும் அல்ல எங்கும் உண்டு. கட்சி வேகம் கரைபுரண்டுவிட்டது; தலைவர்கள் நிலை மறந்து அலைகின்றார்கள்; இங்கே சுதந்தரக்கட்சியா ஐக்கியதேசியக் கட்சியா என்ற இறுமாப்புப்போட்டி, அங்கு உருசியாவா அமெரிக்காவா என்ற சிக்கல்; இடையில் நெருக்கடியில் இன்னற்படுகின்றவர்கள் மக்கள்.

குருசேவும் ஐசன்கோவரும் இருவர் இறுமாப்புப் போட்டியில் இறங்கி இருக்கின்றனர். செம்படை நாட்டுத் தலைவரின் செயல்கள் விநோதமாக இருக்கின்றன. கை தட்டுதல் மேசையில் ஓங்கி அடித்தல், ஊத்துப் பேசுதல் என்று இந்த வகையிற்பல, இடையிலே தமது ஆதரவாளர்களைப் பகிரங்கமாகக் கட்டித் தழுவுதல், இவற்றைப்பார்த்தால் பள்ளிக்கூட மாணவர்களின் கூட்டத்தில் துடிக்கின்ற இளைஞர்களின் நாடகம்பே ன்றிருக்கின்றது.

ஐசன் கோவரும் மாக்மில்லனும் சோகாமற்கோபத்தை மூட்டிவிடுகின்றார்கள்; இதறகிடையில் ஒரு இன்னிசைப் பேச்சு, இந்திய வீரர்நேரு தேவாமிர்தம்போல அளித்திருந்தார்.

மகாத்மா காந்தியின் அடிபணிந்தபண்பாடு அப்படியே தோற்றியது. ஆக்கவேலை செய்யப் பணிபுரியின் இல்லையேல் உலகமே அழிந்துவிடும் என்று நீதி நெறி புகட்டினார், குற்றத்தைக் குற்றமெனச்சொல்லிக் குணத்தைக் கொள்வது நன்றெனக் குறிப்பிட்டு மாநிலத்தின் மாபெருந் தலைவன் இவரே என்று சர்வதேசப் பிரதிநிதிகள் மனங்கசிந்து மெச்சச் சொற்பெருக்காற்றிய பெருமை பிரதமர் நேருவுக்கே யுரியது.

போரில்லாத பாரில் மக்கள் வாழ வழி தேடுவோம் என்று ஒரு உபதேசம்; ஒருங்கிருந்து ஒற்றுமையாய் யாவரும் வாழ்வதா, சின்னபின்னப்பட்டு சிதறுசின்னமாகக் கெடுவதா- இதுதான் நெருக்கடியான கேள்வி என்று ஒரு எச்சரிக்கை; செஞ்சீனாவுக்கும் எங்களுக்கும் நெஞ்சிற் சில குறை உணர்ச்சி உண்டு, ஆனால் செஞ்சீனா ஐக்கியநாடுகள் மன்றத்தில் அங்கம வகித்தல் இன்றியமையாது வேண்டப்படுவது என்று ஒரு நீதி நெறி விளக்கம்; நன்மையாடுவதற்கு நல்ல நெறியைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்று ஒரு தர்மோபதேசம், கொங்கோவின் விதி அங்குள்ளார்க்கன்றி எங்கேயோவுள்ள மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் ஏன் இருக்கவேண்டும் என்று ஒரு நடு நின்ற நோக்கு. பொன்னை சொற்பொழிவு, எந்நாளும் எல்லாரும் மெச்சும் கருத்துக்கள், அமுதமொழிகள், அன்பின் ஊற்று, அறிவின் ஒளி, அநுபவத்தின் சாரம், இதுவன்றோ தலைவனுக்குள்ள பெருங்குணம்!

—

### நற்சிந்தனை

எல்லாஞ்செய வல்லதெய்வம்
எல்லார்க்குந் தெய்வம்
இதையறிந்து வாழுவார்
எல்லாருந் தெய்வம்

நில்லாத நீர்சடைமேல்
நிற்கவைத்த தெய்வம்
நிலமேழுந் தாண்டிநின்ற
நின்மலஞ்சேர் தெய்வம்

கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் தெய்வம்
காணாத காட்சியெல்லாம்
காட்டுகின்ற தெய்வம்

செல்லாரும் மலைசூழு
மிலங்கைவாழ் தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள
தெய்வமிதே தெய்வம்.

(சிவ தொண்டன்)

## அரசாங்கம் 'எடுப்பதற்கு' இந்துக்கல்லூரிகவின் எதிர்ப்பு

"உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதுபற்றி ஆலோசித்து, வித்தியாதிகாரி பாடசாலை அதிபர்களுக்கு "1-9-60" திகதி இட்டு "NSA 1" இலக்கத்துடன் அனுப்பிய சுற்று நிருபந் தரும் பொருளையும் ஆராய்ந்தபின், அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதால் இந்துசமயமும் தமிழர்பண்பாடும் பாரதூரமாகப் பாதிக்கப்படுமென்று நாம் கருதுவதால் உதவி பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதென இச்சபை தீர்மானிக்கின்றது"

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அத்துடன் இணைந்த பாடசாலைகள் ஆகியவற்றின் முகாமைக்கார் சபையார் 2-10-60 ல் நடத்திய விசேட கூட்டமொன்றில் மேற்கண்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

—

### வித்துவ சிரோமணி கணேசையர் நினைவு மலர் வெளியீட்டு விழா

நிகழும் புரட்டாதி மீ 23உ (8-10-60) சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் வித்துவ சிரோன்மணி பிரமஸ்ரீ சி. கணேசையர் நினைவுமலர் வெளியீட்டு விழா, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. ரி. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் வண்ணார்பண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

ஆரம்ப உரை, வரவேற்புரை முறையே திரு. ச. பேரின்பநாயகமவர்களாலும், திரு சு. நடேசபிள்ளையவர்களாலும் நிகழ்த்தப்பெற்றபின், பண்டித வித்துவான் க. கி. நடராசனவர்களால் வரவேற்புப்பா படிக்கப்பெறும். பின்பு கலைப்புலவர் திரு. க. நவரத்தினமவர்கள் மலர் அரங்கேற்றம் செய்ய சேர். கந்தையா வைத்தியநாதன், பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் திரு. வி. செல்வநாயகம் ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்.

—

## ஆரியர் யார் அவர்கள் எங்கே வாழ்ந்தனர்?

### கொள்ளவேண்டிய ஆராய்ச்சி முடிவு எது?

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

மிகப் பழங்காலத்தில் இந்திய நாட்டில் ஆரியர், தமிழர் என்னும் இரு பிரிவினர் வாழ்ந்தார்கள். வடக்கே ஆரியர் வாழ்ந்தனர். தெற்கே தமிழர் வாழ்ந்தனர். அதுபற்றி வடக்கில் வழங்கிய மொழி வடமொழி எனவும், தெற்கில் வழங்கிய மொழி தென்மொழி எனவும் பெயர் பெற்றன. தமிழில் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமையுடைய தொல்காப்பியத்தில் வடமொழியைப் (வடசொல்)பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. ஆரியர் என்னும் சொல் காணப்படவில்லை. அக்காலத்தில் 'வடசொல்' வழங்கிய மக்கள் எப்பெயரால் அறியப்பட்டார்கள் என்று தெரியவில்லை.

சங்க இலக்கியங்களில் ஆரியர் என்னும் சொல் பலவிடங்களில் வந்துள்ளது. "ஆரியர் பிடியயின்று தரூஉம் பெருங் களிறுபோல" (கம் 276) "ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்" (பதிற்-ப)என வருவன சில எடுத்துக் காட்டுகளாகும். ஆரியர் வடவர் எனவும் அறியப்பட்டார்கள். [illegible] ருக்கும் தமிழருக்குமிடை யில் போர்கள் நடந்தன. தமிழ்நாட்டின்மீது படை எடுத்து வந்த ஆரியப்படை ஒன்றை நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசன் முறிய அடித்தான். இதனால் அவன் "ஆரியப் படை கடந்த" என்னும் சிறப்புப்பெற்றான். ஆரிய அரசர் தமிழைப் பழித்துரைத்தார்களெனக் கேள்விப்பட்ட சேரன் செங்குட்டுவன் வெகுண்டு வட நாட்டின்மீது படை எடுத்துச் சென்று அவ்வரசரைப் பணிவித்தானெனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. தொல்காப்பியப் பொருளதிகார உரையில் "ஆரிய நன்று தமிழ் தீது என உரைத்த காரியத்தாற் காலக்கோட்பட்டானை" என்று தொடங்கும் வெண்பாவொன்று மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் ஆரியம் பெரிது, தமிழ் பெரிது என்னும் வாதங்கள் அக்காலத்து நிகழ்ந்து வந்தனவென்று தெரிகிறது. தொல்காப்பியத்துக்கு உரை கண்ட பேராசிரியர் '[illegible] ஆரியர் [illegible] பேசுந் தமிழும் முடவர் செல்லும் செலவும்" எனக் கூறியுள்ளார். தேவாரத்தில் "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என வருகிறது. திருமந்திரம் "ஆரியமும் தமிழுமுடனே சொல்லிக் காரிகையார்க்குங் கருணை செய்தானே" எனக் கூறுகிறது கண்டு நூல்களில் ஆரியன் என்னும் சொல்லுக்குப் பொருள் காணப்படுகிறது. "மிலேச்சராரியர்" (பிங்கலம், திவாகரம்) "மிலேச்சரே ஆரியர்க்காம் மிலேச்சரும் விதித்த பெயரே" (சூடா.நி) மிலேச்சர் என்பதற்கு கிரம்பாத மொழி எனப் பொருள் கூறப்படுகிறது. மிலேச்சர் என்பது அன்னியர் என்னும் பொருளில் வழங்கியிருக்கலாம். ஆரியர் வடக்கே வாழ்ந்தவர், அவர்களின் மொழி வடமொழி என்பதைத்தவிர வரலாற்றுமுறையாக அவர்களின் பழைய வரலாறுகள் அறியப்படாதிருந்தன. கோவாவில் ஐந்து ஆண்டுகள் (1583—1588) தங்கியிருந்த பெலிப்போ சாசெட்டி (Felippo Sassetti) என்னும் மேல் நாட்டவர் சமஸ்கிருதத்துக்கும் ஐரோப்பாவில் வழங்கும் மூதன்மையான மொழிகளுக்கும் ஒற்றுமை காணப்படுவதை முதலில் குறிப்பிட்டார். இவ்வொற்றுமை ஒரு பொதுத் தொடக்கத்திலிருந்து உண்டானது என்று சேர். வில்லியம் யோன்ஸ் (Sir William Jones) கூறினர். [illegible] கொதிக், கெல்திக், சமஸ்கிருதம், பாரசீகம் முதலிய மொழிகள் ஒரு தொடக்கத்தைச் சேர்ந்தவை எனக் குறிப்பிட்டார் (1786). மாக்ஸ்மூலர் 'ஆரியன்' என்பது சாதியைக் குறியாது மொழியைக் குறிக்கின்றதென்றும் 'ஆரியன்' என்பதில் "* x+ ஆரியன்" பேச்சு அடங்கியிருக்கிறதென்றும் குறிப்பிட்டுள்ளார். ஆதியில் ஒரு கூட்டத்தாரிடையே தோன்றிப் பரவிய ஆதி ஆரியத்துக்கு விஞ்ஞானிகள் இந்து - சேர்மன் அல்லது இந்து - ஐரோப்பியம் எனப் பெயரிட்டிருக்கிறார்கள். மேலும் ஆராய்ச்சி நடத்தியவர்கள் இந்து - ஐரோப்பிய மொழியைத் தோற்றுவித்தவர்கள் மத்திய ஆசியாவிலோ அதனை அடுத்த பிற இடங்களிலோ ஆதியில் வாழ்ந்தார்களென ஆராய்ச்சிமூலம் கூறினர்கள். இவ்வாராய்ச்சி முடிவுகளே ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மைகளாகப் பாடசாலை நூல்கள், கலைக்களஞ்சியங்கள், ஆராய்ச்சி நூலகள், "என்சைகிளோபீடியா" முதலிய நூல்களிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்தியாவிலே, ஆரியர் எனக் குறிக்கப்பட்ட மக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி ஖ூ புரட்டாதி மீ
உஉ உ வெள்ளிக்கிழமை


## அடிக்கு மேல் அடி

நினைத்தது ஒன்று நிகழ்கின்றது இன்னென்று; நிலைமை இவ்வாறு ஆகிவிட்டதே என்று தமிழ் பேசும் மக்கள் கவலைப்பட்டு அல்லற்படுகின்றார்கள். தனிச் சிங்களச் சட்டப் புலி வருகின்றது என்று பன்முறை மனக்கலக்கம் உண்டாக்கக் கூடிய சம்பவங்கள் நிகழ்ந்தமையால் இது போலிப் புலி போலும் என்று ஆபத்து நீங்கி விட்டதாக நினைத்தவர்கள் இப்பொழுது உண்மையாகப் புலி தோற்றக்கூடிய அறிகுறிகளைக் காண்கின்றனர்.

சென்ற பங்குனியிலும், ஆடியிலும் நடைபெற்ற தேர்தல்களிலே தமிழ் பேசும் மக்கள் நடு நிலைமை வகித்து எந்தச் சிங்களக் கட்சியுடனும் எண்ணத்திலாவது, பேச்சிலாவது, செய்கையிலாவது நட்புரிமைகாட்டாது நின்றிருந்தால் இப்பொழுது உண்டான ஆபத்தான நிலைமை ஏழமாட்டாது என்று கருதுகின்றனர் பலர். இவ்வளவு காலமும் சிங்களத்தலைவர்கள் ஓடுமீன் ஓடவிட்டுக் காத்திருந்து ஆடித்தேர்தல் அளித்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தைமாதத்தில் உண்மையாக உறுமீன் எதிரே வரும் என்று, (ஆனல் வாடாமல்) மிகு தைரியத்துடன் தனிச் சிங்கள ஆட்சி புரியப்பார்த்து நிற்கின்றனர்.

சிங்காசனப் பேச்சின் சீரென்ன, சிறப்பென்ன, இங்காரும் எமக்கிணையில்லை இராச தந்திரத்தில், என்று ஆநந்தங் கொண்டாடியவர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு என்ன வழிகாட்டப் போகின்றார்கள். அரச சேவையில் அமர்ந்திருக்கும் அத்தனை தமிழ்பேசும் உத்தியோகத்தர்கள் சிங்களங் கற்றுத் தேறித் தங்கள் நிலைமையை நிச்சயப்படுத்துவதா அல்லது மொழியாபிமானத்தினல் வேலையினின்றும் விலகுவதா...? என்ற கேள்விகள் இயல்பாய் எழுகின்றன.

தனிச் சிங்களச் சட்டத்திற்ருக்குண்டால் இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்களின் நிலைமை எவ்வாருகும் என்பதைப்பற்றி எடுத்துப்பேசிக் கொண்டிருப்பதனுற் பயன் விளையமாட்டாது. இச் சட்டம் தமிழ்பேசும மக்கள்மீது சுமத்தப்படாதிருப்பதற்கு என்ன வழிவகைகள் கையாளப்படவேண்டும் என்பதுதான்

# ஆரியஇனக்கொள்கை ஆதாரமற்றது

## கண்டித்து நிராகரித்தனர் தலைசிறந்த விஞ்ஞானியர்

(‘முருக வழிபாடுபற்றி’ ‘தினகரன்’ தமிழ்விழாச் சிறப்புமலரில் கலாநிதி திரு க. கணபதிப்பிள்ளையவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் சைவநிந்தைகள் பொருத்தமற்றவைகள் என எடுத்துக் காட்டிய ஆசிரியர் திரு மு வைத்தியலிங்கமவர்கள், நிராகரிக்கப்பட்ட கட்டுக் கதைகளை ஆதாரமாகக் கொண்டார் அவர் என்று இங்கே சாதிக்கின்ருர். ப—ர்)

(முற்ருடர் - 4)

ஐரோப்பாவின் தலைசிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவர் கலாநிதி ஜூலியன் ஹக்ஷிலி. (Dr. Julian Huxley F. R. S.) அவர்கள் என்பதை யாவரும்அறிவர். இவர்மாத்திரம் இக்கொள்கைக்குக் கண்டனம் எழுதவில்லை. ஐரோப்பாவின் தலைசிறந்த விஞ்ஞானிகள் பலர், ஆரிய இனக் கொள்கையைக் கண்டித்து நிராகரித்திருக்கிருர்கள். அண்மையில் ஐக்கிய நாட்டுஸ் தாபனத்தின் கிளைநிலையமாகிய ‘ஐக்கிய நாட்டுக் கல்வி விஞ்ஞான கலாசார நிலையம் (UNESCO) ஒரு துண்டுப் பிரசுரம் வெளிப்படுத்தியிருக்கிறது. இதன் பெயர் “இனக்கட்டுக்கதைகள்” (Racial Myths — by UNESCO). இப்பிரசுரத்தில் ‘ஆரிய இன’க் கொள்கை நன்கு ஆராயப்பட்டு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. (பார். பக்கங்கள் 33 - 46. ‘இனக் கட்டுக் கதைகள்’ - Racial Myths - by Juan Comas a UNESCO publication). இன்னும் கலாநிதி சிறில் பிபி. என்பவர் ஐக்கிய நாட்டுச் சபையின் கல்விச் சமூகப் பண்பாட்டு நிலையத்தின் ஆதரவின் கீழ் “இனம் துவேஷம் கல்வி” என்று ஒரு சிறு நூல் எழுதி வெளியிட்டிருக்கிருர் (Race. Prejudice and Education by Dr. Cyril Bibby M. Sc., M. A., Ph. D.) இந்நூல் இருபத்தாறு நாடுகளிலிருந்து கூடிய விற்பன்னர்கள் கொண்ட சபையினல் பரிசிலனை செய்யப்பட்டு ஆமோதிக்கப்பட்டது இந்த நூல் ஆசிரியர்களுக்கும் பெற்ருேர்களுக்கும் சமூக சேவையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு வழி காட்டியாய் அமைந்திருக்கிறது.

“His book is fully authoritative: the manuscript was commissioned by uncapsco and revised in the light of comments from twenty-six experts who came from lands as far apart as Mexico, Poland. Canada and India. This is the perfect simple guide to the subject of race for teachers, parents, social workers and citizens in all walks of life.”

இந்நூலில் பின் வரும் கருத்துக்கள் காணப்படுகின்றன. “அநுபவமுள்ள ஆசிரியன் மாணவர்களுக்குச் சொற்களின் கருத்தை விளங்கப்படுத்தும்பொழுது ஒரு சொல்லின் பொருள் இது, அதன் பொருள் இஃதன்று என்று கற்பித்து வைப்பது மிகவும் ஆவசியமாகும். ‘இனம்’ அல்லது ‘சாதி’ என்ற சொல்லை விளங்கப்படுத்தும்பொழுதும் அதன் உண்மைப் பொருளையும் அதன் பிழையான உப

தொடர்ச்சி 6-ம் பக்கம்

இப்பொழுது ஆராயப்பட வேண்டியது. நிலைமை சீர்கெட்டு வருகின்றது. கட்சி வளர்த்துக் காலங்கழிப்பது தேசாபிமானமாகாது. சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் தங்கள் தங்கள் கட்சியை நிலைநாட்டித் தாங்கள் தனிஆதிக்கம் அநுபவிக்க வேண்டுமென்ற பந்தயத்தில் ஈடுபட்டிருப்பதின் பயனே இப்பொழுது தமிழ் இனத்தின் தலைவிதியாய்விளைந்திருக்கின்றது. கட்சி வளர்க்கும் கவனத்திலிருந்த சிங்களத் தலைவர்களைத் தனிமையாக விட்டுத் தமிழ்ப்பேசும் மக்கள் சார்பாகப் பாராளுமன்றம் புகுந்தவர்கள் மௌனமாயிருந்திருப்பார்களேயானுல் தனிச் சிங்களக் கட்சிகள் பலம் அடைந்திருக்கமாட்டா. மாயவழியாற் கட்சி வளர்த்த சுதந்திரக் கட்சி இப்பொழுது மொழிச் சூழ்ச்சியையும் மதச் சூழ்ச்சியையும் வெளிப்படையாக நின்று செய்கின்றதே!

அரசினர் கையிற் பள்ளிக்கூடங்கள் அளிக்கப்பட்டால், அப்பால் மதந்தழுவிய கல்வியைக் கனவிலும் காண முடியாது. சிங்கள மொழியும் இத்தீபகமெங்கும் தமிழ் மக்களின் அரச மொழியாகக் கட்டாயமாகக் காட்சியளிக்கும் நெருக்கடி நேரடியாக எழுவதைத் தடுக்கவும் முடியாது. அப்படியான ஆபத்துக்குரிய திட்டத்தைத் தமிழகத்திலுள்ளவர்கள் எதிர்க்கின்ருர்களா? மேடைப் பேச்சுகள் எங்கே, வேகத்துடன் அபிநயித்த கைவீச்சுகள் எங்கே, மானம் இழந்த பின்பு வாழ்வதும ஒரு வாழ்வா என்று ஞானம் பேசியவர்கள் எங்கே, அடிபணியோமென்று இடிமுழக்கம் செய்தவர்கள் எங்கே?

சிங்களத்தலைவர்கள் கட்சி வளர்த்துத் தங்கள் நயத்தையும், தங்கள் இனத்தின் காரியத்தையும் பெற்றுவிட்டனர். தமிழ்மக்கள் தமிழகத்தில் நடத்திய கட்சிப்போராட்டத்தின் பயன் என்ன?

பள்ளிக்கூடங்களை அரசினர் எடுக்கும் திட்டத்தின் உண்மையான நோக்கம் தனிச் சிங்கள ஆதிக்கத்தை விரைவிற் பரவச் செய்வதே. ஒரு மொழி ஒரு மதம் என்ற கொள்கைக்கு ஊன்றுகோலாகக் கல்விக் கழகங்களை

ஆட்சியாளர்கள் கவருகின்ற திட்டம் இருக்கின்றதென்பதைத் தமிழ்பேசும் மக்களாவது, தலைவர்களாவது எண்ணவில்லை. எண்ணியிருந்தால் இதுவரையில் எதிர்ப்புக்கூட்டங்களின் இடிமுழக்கம் கொழும்புமாநகருக்கெட்டி ஆட்சியாளர்களை யோசிக்கச் செய்திருக்குமல்லவா? பழப்புகழ் பேசி விழா நடத்தி, களியாட்டங்களை வைத்து ஆனந்தமாக உண்டு, உடுத்து, உறங்கி விடுவதுதான் தமிழ்த்தொண்டும், சைவப்பணியும் என்று கருதுகின்றவர்களைக் காண்கின்ருேமேயன்றி, இனத்துக்கும், மதத்துக்கும், மொழிக்கும் எதிரே எழுந்திருக்கும் இன்னலைப்பற்றி எண்ணுவாரையோ, எடுத்து இயம்புகின்றவர்களையோ காணேம். [illegible] நாட்டிலா?

## சைவப் பத்துக் கற்பனைகள்

யாழ்ப்பாணம் ஶ்ரீலங்கா கஷ்ட நிவாரண சங்கம் சைவப்பத்துக் கற்பனைகளைக் கீரிமலை வைத்தியலிங்க மடத்தில் நடந்த திரு. சி. நாகையா ஞாபகார்த்த விழாவில் பிரம்மஶ்ரீ. கு. பாலசுந்தரக்குருக்கள் அவர்கள் சைவப் பத்துக் கற்பனைகளை முதன்முதலாகச் சொல்லிக்கொடுத்தார்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் திரு. நா. ஞானசம்பந்தன் B. A, (Hons) அவர்கள் சத்தியம் மறவேல் என்னும் முதலாவது கற்பனைபற்றி விரிவுரை நிகழ்த்தினுர்

ஶ்ரீலங்கா கஷ்ட நிவாரண சங்கம் சைவப் பத்துக் கற்பனைகள் பற்றி நடாத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ருேருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பரிசு பெற்ருேர் விபரம் வருமாறு:

மேற்பிரிவு

1. சரஸ்வதி பதக்கம்.
   செல்வி வீரசிங்கம்
   பொன் மயில் அம்பிகை,
   யாழ்ப்பாணக்கல்லூரி,
   வட்டுக்கோட்டை.
2. செல்வன்,
   சோமசுந்தரம் இராசசுந்தரம்
   இந்துக்கல்லூரி, கொக்குவில்.
3. செல்வி தர்மநாயகி சோமசுந்தரம்
   இந்துக்கல்லூரி, உரும்பிராய்.

மத்திய பிரிவு

1. செல்வன் நா. ஜெயலொளி பவன்
   ஸ்கந்தவரோதயாக்கல்லூரி,
   சுன்னுகம்.
2. திரு. வ. கணபதிப்பிள்ளை
   மயிலிட்டி,
3. செல்வி செபமாலை மேரி பிலோமின,
   திருக்குடும்ப கன்னியர் மடம்
   இளவாலை.

அச்சுவேலி
## சிவஶ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்
## பாராட்டு விழா

சைவத்துக்கும் தமிழுக்கும் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக அருந்தொண்டாற்றிவரும் அச்சுவேலி சிவஶ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்களைப் பாராட்டுமுகமாக 10-10-60திங்கட்கிழமை மாலை 4-30 மணி தொடக்கம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஒரு விழா நடைபெறும்.

நிகழ்ச்சிகள்:

1. 4-30—5-00 வண்ணை-வைத்தீஸ்வரன் கோயிலில் ஆராதனை,
2. 5-00 — 6-00 ஊர்வலம்: கோயிலிலிருந்து வித்தியாலய மண்டபத்துக்கு
3. 6-00 விழா ஆரம்பம்:
   i. மறை ஓதுதல்
   ii. தமிழ் மறை ஓதுதல்.
4. வரவேற்புரை:
   திரு ம. ஶ்ரீகாந்தா அவர்கள்
5. தலைவர் முன்னுரை
6. பாராட்டுரைகள், வாழ்த்துகள் வாசித்தல்:
   i. சைவபரிபாலனசபை
   ii. கொழும்பு விவேகானந்த சபை
   iii. சிவப்பிராமண சங்கம்
   iv. அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.
   v. சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி.
   vi. ஆலய தர்மகர்த்தாக்கள் சங்கம்
7. பொன்னுடை போர்த்தல்:
   i விழாச் சபை
   ii. சைவபரிபாலன சபை.
8. பொற்கிழி வழங்கல்:
   திரு ஆ முருகேசு அவர்கள்
9. பாராட்டுவிழா மலர்வழங்கல்
   திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள்
10. பாராட்டுரைகள்:
   பல பேரறிஞர்களால் நிகழ்த்ப்பெறும்.

## நாட்டின் பண நிலை

பள்ளிக்கூடங்களை அரசினர் எடுப்பதனுல் ஆண்டுக்கு 12000000 ரூபா அதிகப்படியான பணச்செலவு உண்டாகுமாம்.

பண நிலையின் பயனுக அரசாங்கப் பள்ளிக்கூட மாணக்கர்களின் இ. போ. ச. இலவசப் பயணவசதி பறிக்கப்பட்டது.

அரசினர் வைத்திய சாலையிலுள்ள நோயாளர்களுக்கு மத்தியான உணவு $\frac{1}{2}$ இருத்தல் அரிசிச்சோறும 1/6 இருத்தல் கோதுமை அப்பமும் கொடுபட்டு வந்தது, அப்பங்கொடுபடமாட்டாதா,

## சதானந்தாப் பழைய மாணவனின் அரிய சாதனை

அண்ணுமலைப் பல்கலைக்கழகச் சங்கீதப்பிரிவினரால் சென்ற மாதம் நடத்தப்பட்ட சங்கீதப் போட்டியில் நான்கு வருட இந்திய இலங்கை மாணவர்களுள் முதலாவது இடத்தை செல்வன் க. நடராசா பெற்றுள்ளார். பாராட்டுக்குரிய இவர் அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் பழைய மாணவராவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி சரஸ்வதிபூசை வழிபாடு

### அட்டனில்

அட்டன் ஸ்ரீ இராமகிருஷ்ண மாணவர் விடுதியில் சரஸ்வதி பூசை மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டது. விடுதி மாணவர்களுடன் ஸ்ரீ இராமகிருஷ்ண கலாசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்

மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட விடுதி மண்டபம் இரவில் மின்சார விளக்குகள் பிரகாசிக்க, 12 மணிவரையில் இவ்விழாவின் மகத்துவம்பற்றி, பிரசங்கம் நடைபெற்றது.

தொண்டன் ஆசிரியர் திரு. எஸ். எஸ். நாதன் அவர்கள் பேசும்போது சக்தியின் வல்லமையைக் குறித்து, நமது முன்னோர்கள் எழுதிவைத்துள்ள பற்பல நூல்களைப் படித்தால்மட்டும் போதாது. அவற்றின் உட்பொருளைச் சிந்தனை செய்து பார்த்தால் உண்மை விளங்கும். என்று குறிப்பிட்டு, கல்விக்காக விளங்கும் ஒரு தெய்வம பெண்பலாய் அமைந்ததின் இரகசியம் என்ன என்பதை மாணவர்கள் விளங்குந் தன்மையில் எளிய தமிழ் நடையில் எடுத்துரைத்தார்கள்.

விடுதி அதிபரின் நன்றியுரையுடன் எல்லோருக்கும் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு விழா நிறைவுற்றது,

### நாயன்மார்கட்டில்

நாயன்மார்கட்டு மகேசுவரி வித்தியாசாலையில் சரஸ்வதி பூசை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்வித்தியாசாலையில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும, பழையமாணவர்களும் நிகழ்ச்சிகளிற்பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

### சரவணையில்

விஜய தசமி நாளான (30-9-60) வெள்ளிக்கிழமை இரவு ஷடி பூசை சரவணை சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நிலைய அங்கத்தவர்கள் ஆதரவில் நடத்தப்பட்டது. மாணவர்களு ?, மாணவிகளும், பெறறோர்களும் பூசையில் கலந்து கொண்டனர். பக்திப்பாடல்கள், பேச்சுக்கள், நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. இத்தொடர்பில் தமிழ்ப் பெரியார்கள் நினைவுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. "அமரகவி பாரதி", "அமரர் வன்னியசிங்கம்", "சைவத்தின் மகிமை" என்னும் விடயங்கள் பற்றி முறையே செல்வன் N. தெட்சணாமூர்த்தி, செல்வன் K. கணேசலிங்கம், செல்வன் V. தவச்செல்வம் ஆகியோர் பேசினர். தலைவர் தமது முடிவுரையின்போது மறைந்த தலைவர்களின் ஞாபகமாக அன்னவர்களின் இலட்சியங்களை நிறைவேற்ற முயல வேண்டும் என்றார். தமிழ்த் தலைவர்களுள் ஒருவரான அமரர் வன்னியசிங்கத்துக்கும் அமரகவி பாரதியாருக்கும் அஞ்சலி செய்யப்பட்டது.

## திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்பாள்

—0—

### இலட்சார்ச்சனை வழிபாடுகள்

சிதம்பரம், செப். 26

ஸ்ரீ அபிராமிபட்டருக்காக அமாவாசை அன்று பூர்ண சந்திரனைப் பிரகாசிக்கும்படி செய்த திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு, திருக்கடவூர் பிச்சக்கட்டளை "எஸ்டேட" அதிபர் கோடி அர்ச்சனைத் துவக்கம் செய்து நவராத்திரி விழா 5-வது நாளாகிய 25-9-60 அன்று 39-வது இலக்ஷார்சனை நிறைவு விழாவையும், நவராத்திரி 5-வது நாள் விழாவையும் சிறந்த முறையில் நடத்தி வைததார்.

விழாவை முன்னிட்டு அம்பாளுக்கு விசேஷ அபிஷேகங்களை "எஸ்டேட்டின்" வேத பாராயண ஆசிரியர் பிரம்மஸ்ரீ டி. வி. ராஜீசாஸ்திரிகளின் வேத பாராயணத்துடனும், "எஸ்டேட்"டின் தேவாரப் பாடசாலை ஆசிரியர், மாணவர்களின் திருமுறைப்பாராயணத்துடனும் நடத்தி வைத்து, அம்பாளுக்கு தங்கக் கவசம் (சுமார் 40 ஆயிரம் ரூபாய் செலவு) சாற்றுபடி செய்து கொடிமரம் வரையில் புஷ்பப்பந்தல் போட்டு ஆராதனைகள் செய்து வைத்து 40 வது இலக்ஷார்ச்சனையைத் துவக்கம் செய்துள்ளார்.

மேலும் ஸ்ரீ சுரஸ்வதி அம்பாளுக்கு நவராத்திரி விழாவை முன்னிட்டு விசேஷ அபிஷேகம் செய்து சந்தன அங்கி சாற்றுவதில் புகழ் பெற்றுள்ள திருக்கடவூர் சிவாச்சாரியர் பிரம்மஸ்ரீ, எஸ். முத்தையாக் குருக்களைக்கொண்டு சந்தனக் காப்பு சாற்றுபடி செய்து, பவுண் மயத்தில் சந்தனத்தைக்கொண்டே பல ஆபரணங்கள் போட்டு அலங்கரித்து ஆராதனைகளும் செய்து வைத்தார்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

## தருமை. ஆதரவில் நவராத்திரி விழாவும் கலைமகள் விழாச் சொற்பொழிவுகளும்

சிதம்பரம், அக். 1

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்தில் 9 ஆண்டுகளுக்கு முன்பு நூதனமான முறையில் பிரதிஷ்டை செய்து வைத்துள்ள ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு நவராத்திரி விழா 10 நாளும் சத சண்டி வேள்வி நடத்தி நாள் தோறும் காலை மாலை சுவாசினீகுமாரிவடுபூசை, வேதபாராயணம், தேவி மகாத்மிய பாராயணம், துர்க்கா சூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் ஆகியவைகளுடன் இலக்ஷார்ச்சனையையும, ஸ்ரீ, வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு ஸகஸ்ரநாமார்ச்சனையையும் சிறந்த முறையில் நடத்திவந்து 29-9-60 அன்று நண்பகலில் மகா பூர்ணாகுதி, சதசண்டிஹவன பூர்த்தியையும் நடத்தி வைத்து 30-9-60 அன்று பகல் ஸ்ரீமகாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு தங்க (யாகக் கலசாபிஷேகமும் செய்து வைத்தார்கள்.

நகராத்திரி விழாவை முன்னிட்டு ஆதீன கல்வி நிலையங்களின் கலைமகள் விழா இலக்கியச் சொற்பொழிவுகள் ஆதீன "திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில்" 10 நாளும் சிறந்த முறையில் ஆதீன கர்த்தர் அவர்கள் நடத்தி வைத்தார்கள். சிறுவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும், பார்வதி கல்யாணம், காரைக்காலம்மையார் முதலிய நாடகங்களும் நன்கு நடைபெற்றன.

(திரு. மா. பா. தினமணி நிருபர்)

### சங்கானை அரசடி வயிரவர் கோவில்
### தேர்த்திருப்பணி விஞ்ஞாபனம்

சிவநேயச் செல்வர்காள்!

சங்காவன அரசடியில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் வயிரவப்பெருமானுக்குத் தேர்த் திருப்பணி ஆரம்பமாகி நடைபெறுகின்றது. இத் திருப்பணியைப் பூர்த்தி செய்யத் திரவியம் வேண்டி இருப்பதால் சிவநேயச் செல்வர்கவை உதவி செய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். பணம் பெறுபவரிடம் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பணம் அனுப்புபவர்கள் கீழ் காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,

பொ. அப்பாத்துரைஐயர்.
அரசடி வயிரவர் கோவில்,
சங்கானை,

F 191 19-9-60.

### திருத்துறையூரில் ஸ்ரீ அருணந்திசிவாச்சாரியார் குருபூசை

சிதம்பரம், செப். 20

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள், சந்தானகுரவர் நால்வர்களில் ஒருவரான ஸ்ரீ. அருணந்தி சிவாச்சாரியரின் குருபூசை விழாவை இன்று திருத்துறையூரில் சிறந்த முறையில் நடத்திவைத்தார்கள்.

காலையில் ஸ்ரீ. அருணந்தி தேவருக்கு விசேஷ அபிஷேக, அலங்கார ஆராதனைகள் நடைபெற்று, பகலில் மகேஸ்வர பூசையும், ஏழைகளுக்கு அன்னபாலிப்பும் நடைபெற்றன.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 9-10-60—15-10-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய முயற்சிகளில் சகோதர சகோதரிகள் இந்த வாரம் அதிக உதவியாயிருப்பார்கள். ஆனால் குடும்பச் சூழலிற் பிழை எண்ணத்துக்கு இடமுண்டு. இழிமொழி பரப்புவோர் உமக்கு அதிக துன்பத்தை உண்டாக்குவர்.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பெண்ணின நண்பர்மூலம்இந்த வாரம் தொந்தரவுகளுக்கிடமுண்டு புதுமுயற்சிகள் தாமதிக்கப்படும், சுகவீனங்களுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. சிறிது காலத்துக்கு எது ஒன்றையும் புதிதாய்த் தொடங்கவேண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ம் பாதம்.

இந்த வாரம் சிறு சுகவீனங்களுக்கிடமுண்டு. ஆனல் உத்தியோகத்துறையில் நல்ல வாரம். பகைவர் அழிவும் மனச்சமாதானமும் நிச்சயம். காத்திராத இடங்களிலிருந்து சில இலாபங்களும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

நீர் இந்தவாரம் சண்டைதொடுக்க முந்துவீர், சிறு சுகவீனங்களுக்கும் இடமுண்டு. ஆனல் உத்தியோகத்துறையில் ஒருநல்ல வாரம். நண்பர் உமக்கு எல்லை கடந்து உதவி செய்வார்கள்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தேகசுகம் தொடர்ந்து திருத்தியீனமாயிருக்கும். ஆனல் பணத்துறையில் நல்ல வாரம். இளைய சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பார்கள், பகைவர் அழிவுக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம் காத்திராத இலாபங்கள் நிச்சயம். கமத்தொழில் முயற்சிகளிற் சித்தியும் நிச்சயம், இனததவர்களுடன் சிறு சண்டைகள் உண்டாகலாம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

ஞாயிறு திங்கள் கவனமாய்க் கழிக்க வேண்டும். புதுக் கருமங்களுக்கு வாரமிகுதி நல்லாயிருக்கும் ஆனல் பிதாவழி இனத்தவர் உமககுச் சிறிது துன்பம் உண்டாக்கக்கூடும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். ஆனல் கந்தோரில் தொந்தரவுகளுக்கிடமுண்டு. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கும் இடமுண்டு. திங்கள் இரவு செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்கவேண்டும், வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

பின் அரை வாரத்திலும் முன் அரை வாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். உத்தியோக சித்தியும் புதுமுயற்சிகளில் இலாபங்களும் நிச்சயம், வியாழம் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

உத்தியோகத் துறையில் நல்ல வாரம். காத்திராத இலாபங்களும் நிச்சயம். மூதத சகோதர சகோதரிகள் அதிகஉதவியாயிருப்பார்கள். வார இறுதியில் சிறு சுகவீனங்களுக்கும் கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

தேக சுகம் அதிகம் திருத்தியாயிராது. ஆனல் உத்தியோகத்துக்கு நல்ல வாரம். இனத்தவர்கள் அதிக உதவியாயிருப்பார்கள். கமத்தொழில் முயற்சிகளில்சித்தி நிச்சயம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

இனத்தவர்களுடன் சிறு சண்டைகளுக்கிடமுண்டு. வாகனங்கள் உமக்கு அதிக செலவையும் கோபத்தையும் உண்டாக்கும், குடும்பக் கருமங்கள் அதிகம்திருத்தியாயிரா. உத்தியோகத் துறையில் ஒரு அளவுக்கு நல்லவாரம்.

### நேயர்கள் நெஞ்சம்
## கூட்டுப் பிரார்த்தனையில் திருமுறைகள்

கூட்டுப் பிரார்த்தனை செய்யும் அன்பர்கள் தேவார திருவாசகங்களை ஒதுக்கிச்சிறு துணுக்குகளை முதலில் பாடுகிறார்கள். திருமுறைகளை அவமதிக்கும்முறையில் அவற்றை ஈற்றில் பாடி வருகின்றார்கள்.

அன்று நாவலர் தேவாரம் பாடிய இடங்களில் அருட்பா பாடியதற்கு என்ன செய்தார்? இப் பெரியார் பிறந்த ஈழத்திலேயே திருமுறை நிந்தனை நடக்கின்றதே! இது முறையா?

கூட்டுப் பிரார்த்தனை செய்யும் சைவப்பெருமக்கள் முறையாகத் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருப்புராணங்கள் பாடி ஈற்றில் தாம் விரும்புகிறபடி சிறு துணுக்குகளைப் படிப்பார்களாக.

அ. சபாபதிப்பிள்ளை
நாவலப்பிட்டி,
25-9-60.

### திருவிடைமருதூரில் திருமுறைப் பாராயண விழா


சிதம்பரம், செப். 25.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஆணையின்படி செந்தமிழ் நாட்டில் சிறந்த சிவஸ்தலமாகவும், ஆதீனத்திற்குச் சொந்தமான சிவாலயமாகவுமுள்ள திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவாலயத்தில் 15-9-60 ல் 3-வது ஆண்டு "பன்னிரு திருமுறைப் பாராயணம்" ஆரம்ப விழா நடைபெற்றது.

மேற்படி பாராயணம் 1961-ம் ஆண்டு "சனவரி" மாதம் 3-வது வாரம் வரையில், வாரம் ஒன்றுக்கு காலை மாலை இரு திருமுறைகளை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரு கண்களை ஒத்தன வேதாகமங்கள்

## அவை பெரியோர்க்கு அபேதமாயுள்ளன

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

இவ்வுலகில் பலவகைக் கொள்கைகள் உண்டு. மக்களும் பல்வகைக் குணஞ் செயல்களுடையர். கடவுட் கொள்கையும் ஒவ்வோர் விதமாக இருக்கும். மிக்க தொன்மைவாய்ந்தது சைவ சமயம். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுவோர் சைவர்கள். அக்கடவுள் ஐந்து திருமுகங்களுடையவர். நான்கு முகங்களிலிருந்து நான்கு வேதங்கள் தோன்றின. ஈசான முகத்திலிருந்து ஆகமங்கள் தோன்றின. வேதம் ஆகமம் ஆகிய இரண்டும் ஒரு பரம்பொருளே அருளியவர், ஆலய அமைப்பு முதலியன ஆகமங்களே விளக்கும். வேதமும் கருமகாண்டம், ஞான காண்டம் என்ற பகுப்புடையதே! கருமத்தினுல் ஞானமடைய வேண்டும், வேதம் சூத்திரமும் ஆகமம் அதன் பொருளும் போன்றது என்பது பிழையன்று. சைவ சமயம் வேதாந்தம் சித்தாந்தம் என்ற இருபகுப்புள்ளது. வைதிக சைவர் வேதம் பொது ஆகமம் சிறப்பு என்று கூறவில்லை. வேதாகம உண்மையுணர்வுடைய மெய்ஞ்ஞானிகளும் பாஷிய கர்த்தாக்களும் பாகுபாடு செய்தனர். இறைவருடைய அருள்பெறும் வழிகள் மக்கட் பண்பாடுபற்றி வேறு வேருக நிற்கும். ஆனுல், ஒரே முதல்வரையே வழிபாடு சென்றடையும். பிறந்திறப்போரை வழிபட்டாலும் அதற்குரிய பயன்றருபவர் பராபரப் பொருளாகவுள்ள ஒருவரே, சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவை ஆகமம் விளக்கும் படிகள். அரும்பு, மலர், காய், கனி என்று உபமானங்கூறுவர். நிற்க, வயந்து வேத சிவாகமோர்ப்பேதம் நபஸ்யாமஃ| வேதோபி சிவாகமஃ| (வேத சிவாகமங்களுக்குப் பேதமில்லை. வேதமே சிவாகமம்) நீலகண்டபாஷியம். திருமூலர் திருவாக்கு;

வேதமொடாகமம்
  மெய்யாமிறைவனூல்
ஓதும்பொதுவுஞ்
  சிறப்புமென்றுன்னுக
நாதனுரையிவை
  நாடிலிரண்டந்தம்
பேதமதென்னில்
பெரியோர்க்கபேதமே.

வேதாந்தம் வேண்டாம் என்பாரில்லை. சித்தாந்திகள் சிவபரம் பொருளைத் தலைவராகவும், ஆன்மாக்களை அடிமைகளாகவும் கொண்டு வழிபடுவர். விபூதி உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்களைத் திருவருட்பேற்றிற்கு இன்றியமையாச் சாதனங்களாக அவர்கள் கொள்வர். தற்கால வேதாந்தம் மாயா வாதமே! வேதாந்தம் என்று கூறுபவர் தத்துவமும், சுத்தாத்துவித சைவ சித்தாந்திகளின் தத்துவங்களும் வேறுபட்டே இருக்கும். வேதம் ஆகமம் ஆகிய இரண்டையும் இருகண்களாகவே சைவ சமயாசாரியர்களும் அனுபூதி மாத்திரையானே விளக்கினுர்கள். ஆகவே வேதம் ஆகமம் இரண்டும் ஒரே தன்மையவை. இரண்டும் சைவசமயிகளுக்குப் பிரமாண நூல்களேயாகும். ஆகமமின்றிக் கிரியா மார்க்கம் சிறக்காது. கிரியை வழி சாராது ஞானம் பெற முடியாது. சாமுசித்தராக யாவரும் ஒருசேர ஞானம் பெறவும் சாத்தியமின்று. கூர்ந்து அவ்வுண்மைகளை உணர்வது நலமே.

---

## வேந்தீஸ் விற்பனவு

—:—

### வருஷம் சென்ற அடைவு நகைகள்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை மேற்கில் இருக்கும் கா. செ. இராசதுரை அவர்கள் கடையில் 1956-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 21-ந் திகதி தொடக்கம் 1958-ம் ஆண்டு மார்கழிமாசம் 20-ந் திகதி வரை உள்ப்பட, தவணைதப்பி எடாமல் இருக்கும் நகைகளை 1960-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 17-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படியார் இடத்தில் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ந. ஆறுமுகம்,
வெந்தீஸ் மேஸ்தர்.

சித்தங்கேணி
28—9—1960.

M 122 30, 7-10-60.

---

## காந்தியடிகள் பிறந்த நாள்

சென்ற ஞாயிற்றுக்கிழமை காந்தியடிகளின் பிறந்த நாள் பலவிடங்களிற் கொண்டாடப்பெற்றது. அறப்போர் செய்து இந்திய நாட்டுக்கு விடுதலை பெற்றமை அவர் செய்த மிக முக்கியமான தொண்டாகும். அத்தொண்டுக்கு அத்திபாரமாயமைந்தது அவருடைய தூய வாழ்க்கை. இத் தூயவாழ்க்கை முறையால் உலகம் முழுதுக்குமே அவர் வழிகாட்டியாய் விளங்குகிறுர் என்னும் கருத்துக்கள் இத்தருணத்தில் வெளியிடப்பட்டு எம்மவர் வாழ்க்கையில் அவருடைய தூய முறைகள் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்தப்படுகின்றது.

---

## திருவிடைமருதூரில் திரு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இசைவாணர்கள் முறைப்படி பாராயணம் செய்து வருவார்க்ள்; பாராயணம் நிறைவு பெறும் மறுதினம் இரவு அறுபத்துமூவர் வீதியுலாக் காட்சியும் நடைபெறும்.

பாராயணம் துவக்க விழா (15-9-60) அன்று காலை யானையின்மீது திருமுறைகளை வைத்து, திருமுறைப் பாராயணத்துடன் வீதியுலாக் காட்சி நடைபெற்றது.

(திரு. மா.பா. தினமணிநிருபர்)

---

## ஏந்திர கைத்தொழிற் சமாசம்

### வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புறெஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின் சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

---

## கோயிலாக்கண்டிச்

# சிவன் கோயில்

## புனருத்தாரணம் அவசியம் தேவை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"
—சேக்கிழார்.

இவ்விலங்கையானது பண்டை ஞான்று பலகோடி சிவலிங்கங்களையுடைய நாடாய் இருந்தது. பனங்காமம், பொலனறுவை முதலிய இடங்களிலுள்ள சிவ்ததலங்கள் புனருத்தாரணம் செய்ய வேண்டிய நிலைமையிலிருக்கின்றன. இவை யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்பாகத்திலுள்ளன. சிலமுற்றுப்போன சிவாலயங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் முதலான தலங்கள் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணப்பகுதிகளிலும் பல சிவன் கோயில்கள் இருந்ததாக அறியக்கிடக்கின்றது. அக்கோயில்களைப் பராமரித்தவர்கள் மறைந்துபோகக் கோயில்களும் சிலமுற்றன இப்படிச் சிலமுற்ற யாழ்ப்பாணச் சிவன்கோயில்களுள் மறவன்புலோ கோயிலாக்கண்டிச் சிவன்கோயிலும் ஒன்ருகும். இக்கோயிலின் சுவாமியார் பெயர் திருமூலநாயகர்; அம்பாள் பெயர் திருமூலநாயகி.

இக்கோயில் புராதனமானது. கடற்கரைக்குச் சமீபத்தில் உள்ளது. ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர் பெருமானின் சீடரான ஸ்ரீமத். நாகமணிப்பிள்ளை அவர்களால் தாபிக்கப்பெற்று அவரே அதன் பரிபாலகராகக் கடமையாற்றி வந்தனர், இப்பொழுது பூசை முதலிய நியமங்கள் இல்லாமல் இருக்கிறது. கட்டடமும் சிதைவுற்றிருக்கின்றது. இந்நிலைமையில் இக்கோயிலிருததல் மிகவும் வருந்த வேண்டியதொன்ருகும். ஆகையினுலே இக்கோயிற் றிருப்பணியைப் பூர்த்திபண்ணிக் கும்பாபிடேகம் செய்வது சைவமக்கள் கடமையாகும்.

இத் தலப் பேரில் வரும் கண்டி என்ற சொல் பொலிகண்டி (கந்தவனம்) கோயிலாக்கண்டி — மகாகண்டி என மூன்று இடங்களிற் காணப்படுகின்றன இதனை முக்கண்டியென்பர், இங்கு சுப்பிரமணியப்பெருமானும் எழுந்தருளித் திருவருள் பாலித்திருக்கின்ருர் என ஈழமண்டல சதகநூல் பாடிய சைவப்பெரியார் மட்டுவில் ம. க. வேற்பிள்ளைப்புலவர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த சிவாலய நிருவாகத்தை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் ஏற்றுப் புனருத்தாரணம் செய்ய முன்வருகிருர்கள். இவர்களோடு ஏனைய சைவச் சபைகளும் சைவ மக்களும் சேர்ந்து ஒத்துழைக்குமாறு எம்பெருமான் திருவருள் வழி நின்று சைவமக்கள் யாவரையும் வேண்டுகின்ருேம். பெருமான் அருள் புரிவாராக.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே" (அப்பர்)

[இந்நிதிக்குப் பணம் அனுப்புவோர் தனுதிகாரி சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம் என்ற விலாசத்துககு அனுப்புவார்களாக.]

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்,
20-8-60.

சைவபரிபாலன சபை.
யாழ்ப்பாணம்.

---

## யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

### 1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குக்ள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் வாழ்ந்து இரண்டகம் செய்யும் விஷ செந்துகள்

## எலியால் உண்டாகும் அழிவும் ஆபத்தும்

[பாம்புகளின் வகை, அவை மக்களைத்தாக்கும் முறை, தப்பும் வழி ஆகியவற்றை ஐந்து கட்டுரைகளால் எமக்கு விளக்கி உதவிய வைத்தியரவர்கள் இப்பொழுது, எம்முடன் வாழும் விஷ செந்துகள, அவற்ருலுண்டாகும் ஆபத்துக்கள், அவற்றை நீக்கும் வழிகள் என்பவைபற்றி விளக்கி உதவ ஆரம்பிக்கின்ருர். இவைபற்றிய பொதுக்குறிப்புக்களுடன் எலிகள்பற்றிய விசேட விளக்கம் இங்கே தரப்பெறுகின்றது. அறிதற்கரியனவையும் அவசியம் அறியவேண்டியவையுமாயுள்ள இருகருத்துக்களை வாசகர்கள் நன்கு அவதானிப்பார்களாக.] —ப-ர்.

நாம் நமது பாதுகாப்புக்காகவும், வசதிக்காகவும், வீடுகளை அமைத்து வாழுகின்ருேம். ஆனல் நம்மையறியாது "அழையா விருந்தினர்களாக, எங்கள் வசதிக்காக அமைக்கப்பட்ட வீட்டில், தாங்கள் தங்களுக்கு வசதி செய்து சீவித்து, எங்கள் பொருட்களையும் நாசம் செய்து, உண்ட வீட்டிற்கே இரண்டகம் செய்வார்போல எங்களையே பலியாக்கி வீட்டில் வாழும் விஷ செந்துக்கள் அனேகம் உண்டு. அவைகளைப்பற்றி நம்மில் அனேகர் சிந்திப்பதில்லை. ஆபத்து வந்தபின்னர்தான் கவனம செலுத்துவார்கள். நாம் கவனமாக இருந்தால் அவற்றின் விஷத்தால் தாக்கப்படாமல் வாழுதல்கூடும். வீட்டில் வாழும் விஷ செந்துக்களாவன (1) எலி, (2) புலிமுகச்சிலந்தி, (3) பூரான், (4) தேள், (5) அரணை, (6) பல்லி, (7) வண்டு, (8) குளவி, (9) நாய் (10) பூனை, (11) மண்ணுணிப் பாம்பு, (12) சிவர்வளையன், (13) உண்ணி, (14) தவளை, (15) அட்டை, (16) வீட்டு மிருகங்களாகிய மாடு, ஆடு, குதிரை, கழுதை, (17) எறும்பு, (18) கிரி என்பனவும் பாம்புகளுமாகும். இவை நமது வீட்டிலிருந்து நஞ்சு பாய்ச்சுவதால், நாம் துன்பத்துக்குள்ளாக நேரிடுகின்றது. இவைபற்றி இங்கே தனித்தனி ஆராய்வோம. மூல காரணமான முதல்வனும் வாரணமுகத்தானின் வாகனமாக விளங்கும் எலியைப் பற்றி முதலில் ஆராய்வோம.

விஷ வைத்தியர்
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்

### எலிகள்:

எலி என்பது, ஒருவகையானது என்பதுதான் மக்களின் உள்ளங்களில் பதிந்துள்ள கருத்தாகும். எலிகளில் 18 வகை உண்டென்ருல் ஆச்சரியம்தான். இது பற்றி ஆரூடகாரரும், சித்தர்களும் தெரிக்கின்ருர்கள்.

"எலிக் குலம்
பதினெண் வகை—அவைகளை
இயம்புகிறேனவர்க்கும்
நயம் பெறவே
வலிக்கும் கத்திரிமணியன்
செம் மூக்கன்
வள்ளி, குறட்டை,
கறுங்காற் றலையன்
விடவெலி செந்தலை
மூத்தி செவ்வெலி
வீங்கெலி உலர் வெலி,
தூங்கெலியும்
புடையெலி இரைப்பெலியும்
செங்கண்ணன்
புள்ளி கருடன்
குருக்காவெலியும்
நச்செலி யீரொன்பதும்
கடித்திடும்........"

ஒவ்வொரு எலிக்கும் நாமம் சூட்டி ஆருடம் அழைக்கின்றது. இந்த 18 வகை எலிகளில் இருவகை எலிக்கு விஷமில்லை. (1) வெள்ளெலி, இதை வேட்டை ஆடி என்பர். சில மனிதர்கள் இதன் இறைச்சியை உண்கின்ருர்கள். (2) சுண்டெலி, இது உருவத்தில் சிறியது மனிதரைத் தாக்காது. கீச், கீச் சென்று ஓடித்திரியும். ஏனைய 16 வகை எலிகளும் கொடிய விஷ முடையவையாகும். இவைகளால் தாக்கப்பட்டவர்கள் உடனேயும் இறக்கக் கூடும். கொள்ளை நோய் (பிளேக்கு) முதலிய கொடிய வியாதிகளைக் கொடுக்கக்கூடியவையும் எலிகளே, எலிகளில் கொடிய விஷமுடையது விட எலியாகும். இதுவே உடனே கொல்லும் விஷமுடையது. பல கொடிய சர்ம நோய்களையும், சுவாசப்பை, இரத்தாசயம் முதலிய உள்ளுறுப்புக்களைத் தாக்கி, சதா நோயுண்டாக்கும் விஷமுடையதாகவும் எலியிருக்கின்றது. எலிக்கடியை அசட்டை பண்ணுபவர்கள் நோய்க்குத் தங்களை அர்ப்பணிக்கின்றவர்களாவார்கள். நித்திரையிலேதான் பொதுவாக எலி கடிக்கின்றது. கடியுண்டவருக்கு என்ன கடித்ததென்பது தெரியாது நோவுண்டாகியவுடன், அல்லது வீக்கமுண்டாகியவுடன், ஆங்கில வைத்தியம் பெறும் பொருட்டுக் கிட்டவுள்ள வைத்தியசாலைக்குச் செல்கின்ருர்கள். விஷ நோயைப்பற்றிய விசேட அறிவு இல்லாதிருப்பதால் தங்களின் அனுமானப்படி அவர்கள் வைத்தியம் செய்கின்ருர்கள். அதனுல் பலருக்கு நோய் ஒன்ருயிருக்க வைத்தியம் இன்னென்ருக மாறி, விஷம் தன் வேலையை விரைவில் பூர்த்தி செய்து, நோய் என்ன என்று எவரும் அறிய முடியாத முறையில் மரணத்துக்கு வழியாகின்றது. சிலருக்கு பயித்தியம், தேகப்பிடிப்பு, தேக எரிவு, நடுக்கம் முதலியவை அவர்களின் இயறகை எனத்தக்கவாறு எலி விஷம் செய்கின்றது. ஒரு காலமும் நித்திரையில் குறட்டைவிடாது நித்திரை செய்தவர் திடீர் என்று சத்தத்துடன் குறட்டை விட்டு நித்திரை செய்ய ஆரம்பித்தால், குறட்டை எலியால் தாக்கப்பட்டார் என்று அனுமானிக்கலாம். தேகத்தில் வெள்ளையாகப் [illegible] ஒருவகை சர்ம நோயு[illegible] எலி கடியால் உண்டாவதை அநுபவ வாயிலாக அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே எலிகளின் விஷத்தை அசட்டைபண்ணுமல் தக்க சிகிச்சை முறைகளைக் கைக்கொள்ளுதல் வேண்டும்.

எலிகளை நாம் வசிக்கும் வீடுகளில வசிக்க இடங்கொடாதவாறு பாதுகாப்பாக நாம் இருத்தல் வேண்டும். தீன்பண்டங்களையும், சேலைகள் முதலிய பொருட்களையும் நாசம செய்வது மல்லாமல் நமது உயிருக்கே பகைவனுக உள்ளது எலி. தீன்பண்டங்களைக் கண்ட இடங்களில் வைப்பதாலும், உடுப்புப்பெட்டிகளைக் கவலையீனமான முறைகளில் திறந்து விடுவதாலும், அவைகள் வசிப்பதற்குச் சாதகமான வேறு காரணங்களாலும் எலிகள் வீடுகளில் அதிகம் விருத்தியாகின்றன. அவற்றை அழிப்பதற்கு ஒவ்வொருவரும் கூடியமுயற்சி எடுத்தல் வேண்டும் பொறிகள்மூலம் அழித்தல், பூனைகளைக் கொண்டு அழித்தல் ஆகியவையாய் அவற்றை அழிக்கும் வகைகளையும் இடத்துக்கேற்பதாகச் செய்தல் வேண்டும. பொதுவாக எலிகள் இரவில்தான் நடமாட்டம் தொடங்கும். ஆகையால் உடைத்த தேங்காய், மரக்கறிச்சாமான்கள், வேறு உணவுப்பதார்த்தங்கள் ஆகிய எல்லாவற்றையும் மூடிவைத்தல் வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் அவையுண்ட உணவுகளை நாங்கள் உண்பதால் எலி கடிக்காமலே விஷம் நமது வயிற்றுட் சென்று குடல் நோய்களைக் கூட உண்டாக்குகின்றது. எலியின் மலம், சலம் முதலியனவும் விஷமுடையவையாகும். ஆகையால் கூடியவரையும் எலி ஒழிப்புத் திட்டங்களை நாம் கைக்கொள்ள வேண்டும். —தொடரும்.

## ஆரியர்யார் அவர்கள்

1-ம் பக்கத்தொடர்ச்சி

கள் தென்னிந்திய மக்களை விட நிறத்தாலும் மொழியாலும் சமயத்தாலும் வேறுபட்டவர்களாகவிருந்தார்கள். அவர்கள் வெண்ணிறத்தினர் செம்பட்டை மயிரினர் * பாணினி முனிவரின் இலக்கணத்துக்குப் பாடியம் செய்த பதஞ்சலி முனிவர் "பிராமணரின் சிறந்த இலட்சணம் சிவந்த மயிருடையவர்களாயிருப்பது" எனக் கூறியிருக்கின்ருர். ஆகவே கிறித்துவ ஆண்டு தொடங்குவதன் முன் ஆரியர் வெண்ணிறமும் செந்நிற மயிருமுடையவர்களாகவிருந்தார்கள் (* The history and culture of Indian people Vol I p 210).

சிலர் ஆரியர் வெளியினின்று வரவில்லை. அவர்களின் மொழியே வெளியிலிருந்து வந்தது என்றும் அவர்கள் வடஇந்தியாவின் ஒரு கோணத்தில் ஆதிமுதலே வாழ்ந்தவர்கள் என்றும் கூறி[illegible] [illegible] சிலர் ஆரியர் திராவிடர் என்னும் பிரிவுகள் வழிபாடு வேறுபாடு காரணமாக உண்டானது எனக்கூறுகின்றனர்.

இருபாலாரின் நியாயங்களையும் சீர்தூக்கியாராய்ந்து இன்று பெரும்பாலும் எக்கொள்கை நிலவுகின்றதோ அதுவே ஏற்றுக்கொள்ளத்தக்கதென்னுமுண்மை. பாரத வித்தியா பவான் வெளியீடாக வெளிவந்து கொண்டிருக்கும் "இந்திய மக்களின் பணபாடும் வரலாறும்" என்னும நூலின் முதற்பகுதியில் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது.

* இது அறியப்படாததற்குள்ள குறி.

நேயர்கள் நெஞ்சம்

# திருமூலர் காலம் எது?

## ஆராய்ச்சிக்கு அரசமர உதவி

=0=

இற்றைக்கு 2500 வருடங்களுக்கு முன் புத்த காயவிலுள்ள அரசமரததின் கீழிருந்து தவம்செய்து ஞானம் பெற்ற சித்தார்த்த இராசகுமாரன் கௌதம புத்தராய் உலகமறியப் பெரும் சமய போதகராக விளங்கினர் அரச மரத்தைப் போதிமரம் என்று பாளி பாஷையில்கூறுவார்கள். சமஸ்கிருதத்தில் "அஸ்வத்தா" என்று சொல்லுவார்கள். பகவத்கீதையில் "சர்வ விருக்ஷாணுமை அஸ்மி அஸ்வத்தா" என்ற வாக்கியம் கிடக்கிறது. 3000 வருஷம் திருவாவடுதுறையில் ஈஸ்வரன்கோயில் சுற்றுப்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் உள்ள அரசமரத்தின் கீழ் இருந்து தவம் இயற்றி வருஷம் ஒன்றுக்கு ஒரு பாட்டாக திருமூலநாயனர் தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரத்தில் ஆகமங்களின் சாரத்தை ஒன்பது தந்திரங்களில் செய்தருளினர்கள். திருமூலநாயனர் தாம் ஆவடுதுறையில் போதியின்கீழ் இருந்து தவம் செய்ததைப் பலமுறை கூறுகிருர். இதனல் நாம அறிவது அரசமரம் தவம் செய்வதற்கு ஏற்ற மரம் என்பது. அதற்குத் தனிப் பெருமை உண்டு. அதனல் தான் பௌத்தபெருமானும் திருமூலநாயனரும் அதன்கீழ் தவம் செய்தார்கள். கீதையில் கூறியதோடு இவ்விரு மகான்களும் அதன் கீழ் இருந்து தவம் செய்ததை உற்று நோக்கும்போது அரசமரம் இவர்களுக்கு முன்னரே ஒரு பெரும்இடத்தைப் பெற்றுள்ளதாகத் தோற்றுகிறது. ஆனல் போதி என்ற சொல் தமிழ்ச் சொல்போல் தோற்றவில்லை. பாளி மொழியிலுள்ளதும் ஆரியபாஷைக்குச் சேர்ந்ததாகவும் தோற்றுகிறது. அதனல் திருமூலநாயனர் தென் நாட்டில் பௌத்த சமயம் புகுந்தபின் அங்கு இந்தச் சொல் வழக்கில் இருந்தபடியால் அதைப் பாவித்தாரா என்ற கேள்வி எழுகிறது. அப்படியானல் திருமூலர் புத்தபகவானுக்குப் பிந்தியவராக எண்ண இடமுண்டு. இதுபற்றி, கற்றவர்கள் தெளிவாக்குவார்களாக.

சௌரிராயன்

### நினைவுச்சின்னத்திறப்புவிழா

வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் நினைவாக வருத்தலைவிழான் மருதடி விநாயகர் ஆலயத்தின் வடபால் அமைக்கப்பட்டகட்டடம் இன்று (7-10-60) மாலை 6 மணிக்கு திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களால் திறந்து வைக்கப்படும் பின்னர் பொதுக் கூட்டத்தில் திரு. T. M. நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் (அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 'தினகரன்' ஆசிரியர் திரு. க. கைலாசபதி அவர்கள், பிரம்மஸ்ரீ சி. எஸ். எஸ். மணிஐயர் அவர்கள் பங்குபற்றுகின்றனர்.

### கயிலாய யாத்திரையின் நினைவு விழா

சிதம்பரம். செப். 24

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், இமயமலையில் சிறந்த சேத்திரங்களான, திருக்கேதாரம், பசுபதிநாத், அமரநாத், திருக்கயிலாயம் முதலியன யாத்திரை சென்றுவந்ததின் நினைவாக எழுப்பப்பட்டுள்ள "திருக்கேதார நிலையம்"; "பசுபதிநாத நிலையம்"; "அமரநாத நிலையம்"; "திருக்கயிலாய தரிசன நினைவு வளைவுகள் இரண்டு" ஆகியவைகளின் திறப்பு விழா, நவராத்திரி விழா 3-வது நாள் மாலை சிறப்பான முறையில் நடைபெற்றது.

பனசை ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் மேற்படி நினைவுச் சின்னங்களைத் திறந்து வைத்தார்கள். ஆதீனத்தின் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் நினைவுச் சின்னங்களின் திறப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்ந்தன. ஆதீனத்திலுள்ள 9 கல்வி நிலையங்கள் சார்பிலும் பனசை ஸ்ரீ காசிவாசி சுவாமிகளுக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர்.

இரவு ஆதீன கல்வி நிலைய சிறுவர், சிறுமிகள் "காரைக்கால் அம்மையார்" நாடகம் நடத்தினர். நாடக முடிவில் காரைக்கால் அரசாங்க நிர்வாக அதிகாரி ஸ்ரீ தேஷ் பாண்டே ஆதீனப்பணிகளைப் பெரிதும் பாராட்டி நாடகம் நடித்த சிருர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ. கயிலை குருமணி அவர்களின் ஆசியுடன் கூடிய பரிசுகளை வழங்கினர். ஸ்ரீலஸ்ரீ. கயிலை குருமணி அவர்கள திருக்கயிலாய யாத்திரை நினைவுச் சின்னங்களின் திறப்புவிழா மலர் ஒன்றும் வெளியீடும் செய்துள்ளார்கள்.

(திரு. மா.பா. தினமணிநிருபர்)

## அணிந்துரை அரங்கம்

### இந்து இளைஞன்

கொழும்பு இந்துவாலிபர் சங்க வெளியீடாகிய இதன் மூன்ரும் இதழ்ப் பிரதிகள் வரப்பெற்ரும். சைவப் பெருமக்கள் பலருடைய சிறந்த கருத்துக்கள் இவற்றிற் காணவருகின்றன,

x x x

### புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ் மலர்

கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரித தமிழிலக்கிய சங்க 15-ம் ஆண்டு நிறைவு வெளியீடாகிய மேற்படி மலர் வரப்பெற்ஞம். இதைப் பார்க்கும் பொழுது குறித்த சங்கம் தொடர்ந்து செய்துவரும் தமிழ்த் தொண்டு பெரும் பாராட்டுககுரியதாகின்றது. பொருள் செறிந்த பிற கட்டுரைகளுடன் ஈற்றில் நின்றிலங்கும் "சிறுவர்களும் சினிமாவும்" என்னும் கட்டுரையின் மொழியாட்சி முழுதும் போற்றப்பட முடியாதாயினும் அது வெளியிடும் சிறந்த பொருள் கருத்து இக்காலப் பெற்ருர் யாவருமறிய வேண்டிய தொன்ருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரிய இனக்கொள்கை ஆதாரமற்றது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தையும் சுட்டிக் காட்ட வேண்டும். ஆசிரியன் மாணவர்களுக்கு, 'ஆரிய இனம்' 'பிரித்தானிய இனம்' யூத இனம்' 'அரேபிய இனம்' என்று மனித இனங்கள் இல்லை என்பதை விளக்க வேண்டும். முன் ஒரு காலத்தில் இருந்திருக்கலாம் என்று கருதப்படும் ஒன்றுக்கு இட்ட பெயர்தான் 'ஆரியன்' 'ஆரிய இனம்' என்று கூறுவது சொற்களைத் துர்ப்பிரயோகம் செய்வதாகும்; ஒரு பாஷையைப் பார்த்து, இந்தப் பாஷைக்குக் கறுத்தத்தோல் உண்டு என்று கூறுவதுபோல, சிரிப்புக்கு இடமான பேச்சாகும்".

"Every experienced teacher knows that, when explaining to children what a word means it is often necessary also to explain what it does not mean and the word 'race' is no exception. On these grounds—strictly educational grounds—the teacher should explain that there is no biological warrant at all for such terms as the 'Aryan race' and so on. 'Aryan' is the linquistic term for a hypothetical early language......Indeed to speak of an 'Aryan race' is as great an abuse of words as to speak of a black-skinned language' and this should be made clear to children."

'ஆரிய இனம்' என்றொரு சாதி உலகத்தில் ஓர் இடத்திலும் இருக்கவில்லையென்பதும், அது இந்தியாவில் நுழைந்தகதை மலடிமகன், முயற் கொம்புபோல் வெறுங் கருத்தற்ற கூற்று என்பதும் இக்கால ஆராய்ச்சியின் முடிபாகும். இதனைக் கலாநிதி ஜூலியன் ஹக்ஸிலி சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறியிருக்கிறார் "ஆரிய இனத்தைப் பற்றி இந்த மனிதர்கள் எழுதியவைகள் எல்லாம் ஒதுக்கித் தள்ளப்பட்டவையும் மதிப்பில்லாதவையுமான கொள்கைகள் சென்றடையும் குப்பைக்குள் வீசப்பட்டுவிட்டன. இங்கிலாந்திலும் அமரிக்காவிலும் "ஆரிய இனம் என்ற சொற்றொடர் விஞ்ஞான அறிவுள்ள எழுத்தாளர்களால் உபயோகிக்கப்படுவதில்லை. ஆனால் அரசியல் வாதிகளும் பிரசாரக் குழுக்களும் சில சந்தர்ப்பங்களில் பிழையாக உபயோகிக்கிறார்கள்."

What these men have written on the subject ('Aryan race') has been cast by historians into the limbo of discarded and discredited theories. In England and America the phrase 'Aryan race' has quite ceased to be used by writers with a scientifiic knowledge, though it appears occasionally in potitical and propagandist literature" (D. U. Julian Huxley, Race in Europe page 21).

இஃது இவ்வாறு இருக்க, இந்தியாவிலும் இலங்கையிலும், ஆதாரமற்ற, பிழையான 'ஆரிய இனக்' கொள்கையை, நிரூபிக்கப்பட்ட உண்மையென நம்பி ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில், அணு பிரிக்க முடியாத மிகச் சிறிய பொருள் என்று விஞ்ஞானிகள் கூறினார்கள்; ஆசிரியரும் மாணவர்களும் கற்றுவந்தார்கள். இப்பொழுது ஒருவர் அணு பிரிக்கமுடியாது என்று வைத்துக்கொண்டு ஆராய்ச்சி துவங்கினால் அதன் போக்கு என்னவாய் முடியும்? இதுபோலத்தான் 'ஆரிய இனக்'கொள்கையை நம்பித்துவங்கும் ஆராய்ச்சிகள் கருத்தற்றவைகள்; பிழையானவைகள். இருந்தும், இக்கொள்கை சில விஷமிகளாலும், இந்து மதத்துரோகிகளாலும் கையாளப்பட்டு வருகிறது.

ஆரிய இனக்கொள்கையின் பிரதிபலிப்புத்தான் திராவிட இனக்கொள்கை. 'ஆரிய இனத்தை'ப் பேராசிரியர் மாக்ஸ்முல்லர் பெற்றுவிட அரசியல்வாதிகள் வளர்த்தார்கள். 'திராவிட இனம்' அதி. வணக்கத்துக்குரிய கோல்ட்வெல் பாதிரியாரால் (Bishop Coldwell) ஆக்கப்பட்டது. இப்பொழுது தென்னிந்தியாவில் அரசியல்வாதிகளால் உபயோகிக்கப்படுகிறது. எப்படி ஆரிய இனக்கொள்கை ஜேர்மனிதேசத்தில் ஹிட்லராலும் அவர் சகாக்களாலும் உபயோகப்படுத்தப்பட்டதோ அப்படியே 'திராவிட இனக்' கொள்கையும் தென்னாட்டில் அரசியல்வாதிகளால் தங்கள் சுயநலத்துக்காக உபயோகிக்கப்படுத்தப்பட்டு வருவதை நாம் இப்பொழுது கண்கூடாகக் காணலாம். உண்மையில் 'ஆரிய இனமும்' இல்லை; 'திராவிட இனமும்' இல்லை. இவைகள் அந்நியர்களால் ஆக்கி நுழைக்கப்பட்ட வெறுங் கட்டுக் கதைகள். இக்கொள்கைகள் தொடங்கிய முறையையும் வளர்ந்த விதத்தையும் இனிமேல் வரும் கட்டுரைகளில் கண்டு கொள்க.

இருக்க, பேராசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள், முருகப்பெருமானிடத்து வழிப்படுத்தும் திருமுருகாற்றுப்படையைப்பற்றி வெளிப்படுத்திய சில கருத்துக்களை ஆராய்ந்து மேற்செல்வாம்.

திரு. க. கணபதிப்பிள்ளையின் கூற்று "திருமுருகாற்றுப்படையோ முழுவதும் முருகனைப்பற்றிய நூலாக விளங்குகின்றது. இப்பாட்டு தமிழர் வழிபாடும் ஆரிய வழிபாடும் ஒன்றிய காலத்தில் எழுந்திருக்க வேண்டும். ஏனெனில் இப்பாட்டில், தமிழர் வழிபாட்டு முறையும் ஆரிய வழிபாட்டு முறையும் இடம்பெற்றிருக்கின்றன. தமிழர் வழிபடும் முறையைத் திருமுருகாற்றுப்படை மிக விரிவாகக் கூறுகின்றது. சிற்றூர்களில் சிறு தினையை மலரொடு தூவி மறியறுத்துச் சேவற்கொடியை உயர்த்தி முருகனுக்கு வழிபாடாற்றுவர். இத்தகைய வழிபாடு குறிஞ்சி நிலத்தில் நடந்து வந்த தமிழர் வழிபாடேயாகும். ஆனால் திருச்சீரலைவாய், திருவாவி நன்குடி திருவேரகம் ஆகிய பதிகளில் வடமொழிப் புராணங்களில் வரும் கார்த்திகேயனது வழிபாட்டு முறையும், அவனை வணங்கிவரும் தேவர் முனிவர் முதலியோருடைய காட்சியும் விபரிக்கப்பட்டுள்ளன" என்பது.

திருமுருகாற்றுப்படை முழுமையும் முருகனைப்பற்றிய நூல் என்பதில் ஓர் ஆட்சேபமும் இல்லை. இது பிற ஆற்றுப் படைகள் போலாது, முருகப்பெருமானுக்குரிய சிறந்த படைவீடுகள் ஆறினையும் முறைப்படி கூறி ஆறு பாக்களாய் அமைந்திருக்கிறது. இந்த நூல் வீடுபேறாகிய பெரும் பேற்றைப் பெறுவதற்கு வழிப்படுத்துகின்றது. இப்பாட்டுக்களுக்குத் தலைவராயினர் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய்' விளங்கும் முருகப்பெருமான் ஆவர். எக்காலத்தும் எத்தன்மையராலும் போற்றப்பட்டு வழிபடுபவராவர் அவர். முருகக்கடவுளின் திருவடிகளைச் சிந்திக்கும் மனப்பான்மையைப் பெற்றோர் தங்கள் தங்கள் இயல்புக்கும் ஆற்றலுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப அவர் எழுந்தருளியிருக்கும் சிறந்த தலங்களையடைந்து வணங்கி அருள்பெறுவர்.

இத்தகைய திருமுருகாற்றுப்படை சங்க நூல்களுள் ஒன்றாகிய பத்துப்பாட்டின் முதற்பாட்டாகும். இதை இயற்றியவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். இவர் இஃதன்றி, பத்துப்பாட்டில் நெடு நல்வாடையென்னும் பாட்டும், நற்றிணையில் ஏழு பாடல்களும், குறுந்தொகையில் எட்டும், அகநானூற்றில் பதினேழும், புறநானூற்றில் மூன்றுமாக முப்பதாறு பாட்டுக்கள் இயற்றியுள்ளார். ஆகையினால் திருமுருகாற்றுப்படை மற்றச் சங்க இலக்கியங்களுக்குப் பிந்தியது என்று கூற ஓர் ஆதாரமுமில்லை.

—தொடரும்.

## நேருஜி சனசமூகநிலையம் 6ம் நாள் நவராத்திரிவிழா

—0—

மேற்படி நிலையத்தின் விழா சென்ற திங்கட்கிழமை ஸ்ரீ முருகன் சங்கத்தால் நிகழ்த்தப்பட்டது. பக்திப் பாடலுக்குப் பின் நிகழ்ந்த கூட்டத்துக்கு திரு. ஆ. சதாசிவம் ஆசிரியர் தலைமைவகித்தார். திரு. குமாரசாமிப் புலவர் முதலிய பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

——

இழந்த புலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புதளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக்கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1க்கு ரூ. 12-00,

மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்

ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.

## பண்டிதர் திரு. கா பொ. இரத்தினம் அவர்களுக்குப் பாராட்டுக்கூட்டம்

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் பண்டிதர் கா. பொ. இரத்தினமவர்களுக்குச் செய்யப்பெற்ற பாராட்டுவிழாவில் திரு. இரத்தினம் அவர்கள் பேசியதாவது:—

"மொசுக்கோவில் நடைபெற்ற மாநாட்டில் பங்குபற்றியதால் என் தமிழ் உணர்ச்சியைத் தளரவிடாது வளர்க்க எனக்கு வாய்ப்பு உண்டாயிற்று. தமிழ்ப்பெருமக்களை உங்கள் வாழ்வின்துறை அனைத்திலும் தமிழுக்குமுதன்மை அளியுங்கள் என்று யான் கேட்டால் அன்பர்கள் சிலர் எனக்குத் தமிழ்ப்பித்து என்று எண்ணுகிறார்கள். யான் இடித்து வற்புறுத்தினால் எனக்குத் தமிழ்வெறி என்றுகூடக் கருதுகிறார்கள். தமிழர்கள் தமிழிலே கையெழுத்திடுவதுகூட இயற்கைக்கு மாறான செயல் என்று எண்ணுகிறவர்களும், தமிழிலே கையெழுத்திட்டால் தாழ்வு என்று எண்ணுகிறவர்களும் தமிழிலே கையெழுத்திடப் பழக்கமின்மையாற் கூச்சப்படுகிறவர்களும் நம்மிடையே பலருளர். இப்பெருமக்களுக்கு மொசுக்கோ நகரத்தில் நடந்தமாநாட்டில் நான் நேரிற் கண்டவற்றை எடுத்துக்கூற விரும்புகின்றேன். அம்மாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து வந்த பேராசிரியர் சுந்திகுமார் சட்டர்சி என்பவரிடம் அவருடைய முகவரியினைத் தருமாறு கேட்டேன். இப்பண்புமிக்க பேரறிஞர் 'நன்னெறிமுருகன்" என்று தமது பெயரைத் தமிழிலே - தனித்தமிழிலே எழுதிக்கொடுத்தார் உருசிய நாட்டிலே தமிழ்பயின்று புலமைபெற்றுள்ள உருசியப் பெரியார் மூவர் தங்கள் பெயரைத் தனித்தமிழிலே "செம்பியன்", "ஐங்குன்றன்", "கண்ணன்" என்று மாற்றித் தமிழிலே கையெழுத்திடுகிறார்கள் என்று குறிப்பிட்டு இந்தப் பிறநாட்டு அறிஞர்களுக்கு இருக்கும் தமிழ் உணர்ச்சியில் ஒரு சிறிதேனும் நம் நாட்டுப் பெருமக்களுக்கு இருப்பின் அவர்கள் தமிழிலே தம் கையெழுத்தை இடுதற்கு வெட்கப்படுவார்களா? தமிழிலே இடுங்கள் தமிழராய் வாழுங்கள் என்று கூறுபவர்களைத் தமிழ்வெறியர் என்று கருதுவார்களா? என்று விசனத்துடன் வினவுகின்றார்,

——

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B/2429

1. இராசசிங்கம், பரசிருபசிங்கம்
2, பெண் பாக்கியம் — சரவணை

—வழக்காளி.

எதிராக

1. S. கந்தையா நாகையா வேலணை மேற்கு.

—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் கோட்டின் M.B/2429-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஈட்டுரித்தை, 1960-ம்ஹு கார்த்திகைமீ 12உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் கோட்டு வீட்டில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபாய் 19911/-ம் 9-9-58தொடக்கம் 10-6-59 வரைக்கும் ரூபாய் 10,000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 460/23.

ஆதன விபரம்

மேலே சொல்லப்பட்ட 1-ம் எதிரியின்பேரில் 11400-ம் இலக்க வழக்கில் தீர்வையாயிருப்பதும் 1952-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி நொத்தார்சு பொ. இராமலிங்கம் முகதாவில் முடிந்த ஈட்டுறுதியும், அதன் நயம், உரித்து, சொந்தை முழுவதையும் அதாவது ரூபா 19520/- இன்னும் ரூபா 15000/-க்கு 1954-ம் ஆண்டு ஆடிமாதம் 16-ந் திகதி தொடக்கம் 1956-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19-ந் திகதி வரைக்கும் வருடம் 12%வீதவட்டியும் முழுத்தொகையிறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவும்.

A. S Rajendiram,
கொமிஷனர்&விலைமதிப்பாளர்.
M. 125 7-10-60.

தொழில் நுட்பக் கல்லூரி

(SCHOOL OF TECHNOLOGY)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரப்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 7-10-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org